செ.வெ.எண்:49/மார்ச் நாள்:28.03.2021

**தருமபுரி மாவட்ட பென்னாகரம் வட்டம் ஒகேனக்கலில்100 சதவீதம் வாக்களிப்போம் என்பதை வலியுறுத்தும் வகையில் கலை நிகழ்ச்சி, சுற்றுலா பயணிகளுக்கு துண்டு பிரசுரம் வழங்குதல், மாதிரி வாக்குசாவடி மையம் அமைத்தல் , கோலப்போட்டி, மனித சங்கலி போன்ற விழிப்புணர்வு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திருமதி. எஸ்.பி.கார்த்திகா.,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.**

தருமபுரி மாவட்ட பென்னாகரம் வட்டம் ஒகேனக்கலில்100 சதவீதம் வாக்களிப்போம் என்பதை வலியுறுத்தும் வகையில் கலை நிகழ்ச்சி, சுற்றுலா பயணிகளுக்கு துண்டு பிரசுரம் வழங்குதல், மாதிரி வாக்குசாவடி மையம் அமைத்தல் , கோலப்போட்டி, மனித சங்கலி போன்ற விழிப்புணர்வு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திருமதி. எஸ்.பி.கார்த்திகா.,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் எதிர்வரும் 06.04.2021 அன்று நடைபெறவுள்ளது. இதனையடுத்து தருமபுரி மாவட்டத்தில் 100% வாக்குப்பதிவை உறுதி செய்திடும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மகளிர் திட்டம் மகளிர் சுய உதவி குழுவின் கோலப்போட்டி, மனித சங்கிலி, கிராமிய கலை நிகழ்ச்சிகள், நடைபயணம், துண்டு பிரசுரங்களை விநியோகித்தல் மற்றும் 100 சதவிகிதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி, உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. அதனைத் தொடர்ந்து இன்று பென்னாகரம் வட்டம் ஒகேனக்கலில் தேர்தல் விழிப்புணர்வு நடவடிக்கையாக 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பிளாஸ் மேப் கல்லூரி மாணவியரின் கலை நிகழ்ச்சி, சுற்றுலா பயணிகள் பொதுமக்களுக்கு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது. மாதிரி வாக்குசாவடி மையம் அமைத்தல், நல்லான்பட்டி பயிற்சி மைய 20 மாணவர்கள் சிலம்பு, உடற்பயிற்சி செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர், மனித சங்கலி போன்ற விழிப்புணர்வு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திருமதி. எஸ்.பி.கார்த்திகா.,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

மேலும் 2000 சுற்றுலா பயனளிகளுக்கு வாக்களர் துண்டு பிரசுரங்களை வழங்கப்பட்டது நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் விழிப்புணர்வு பதாதைகளை கையில் எந்தி சென்றனர் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் மூலம் கோலப்போட்டிகள் நடைபெற்றது.

பின்னர் தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்-2021 தொடர்பாக தருமபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டம் ஒகேனக்கலில் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தேர்தல் நாளான ஏப்ரல் 06 ஆம் தேதியை குறிக்கும் வகையிலான ராட்ச பலூனை மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திருமதி. எஸ்.பி.கார்த்திகா.,இ.ஆ.ப., அவர்கள் பறக்க விட்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.ராமமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திருமதி.கவிதா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.நாகலட்சுமி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.சீனிவாசசேகர், தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.ஆ.தணிகாசலம், வட்டாட்சியர் திரு.பாலமுருகன்,செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மு.பாரதிதாசன், பென்னாகரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.ரேகா, திரு.ஆனந்தம் மகளிர் திட்ட அலுவலர் திரு.காமராஜ், 2000க்கு மேற்பட்ட நபர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**